

# குடும்பங்கள் மற்றும் Child Outcome Summary (குழந்தை பெறுபேறு சுருக்கம்)

## CHILD OUTCOME SUMMARY (குழந்தை பெறுபேறு சுருக்கம்) செயல்முறை

### இது எப்படிச் செயல்படுகிறது?

Child Outcome Summary (குழந்தை பெறுபேறு சுருக்கம், COS) செயல்முறையானது குழந்தைகளிடம் காணப்படும் வளர்ச்சி குறித்த தகவல்களை முன்கூட்டிய தலையீட்டில் சேகரிக்கப் பயன்படுகிறது. ஒட்டுமொத்தமாக, உங்கள் குழந்தையின் செயல்பாட்டு வளர்ச்சி எப்படி இருக்கிறது, எப்போது அவர்கள் சேவைகளைத் தொடங்குகிறார்கள், எப்போது அவர்கள் தன்மை மாறல் ஏற்படுகிறது என்பதை நாங்கள் கண்டறிகிறோம். இது அவர்கள் முன்கூட்டிய தலையீட்டுச் சேவைகளின்போது மூன்று முக்கியப் பகுதிகளில் எந்தளவு வளர்ச்சியை எட்டியுள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

## மூன்று முக்கியப் பகுதிகள் எவை?

### நாங்கள் கண்காணிக்கும் விளைபயன்கள்:

- நேர்மறையான சமூக-உணர்வுப்பூர்வத் திறமைகள் மற்றும் சமூக உறவுகள்
- அறிவையும் திறமைகளையும் பெறுதலும் பயன்படுத்துதலும்
- அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய முறையான நடத்தைகளைப் பயன்படுத்துதல்

## வளர்ச்சிநிலையில் யார் தீர்மானிக்கிறார்கள்?

### உங்கள் குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணித்தல்.

மற்றவர்களைக் காட்டிலும் உங்கள் குழந்தையை நீங்கள் நன்கு அறிவீர்களென நம்புகிறோம். முன்கூட்டிய தலையீட்டுச் உங்கள் குழந்தை இருக்கும்போது, எந்தளவு முன்னேற்றத்தை அவர்கள் கண்டுள்ளனர் எனத் தீர்மானிப்பதில் உங்கள் குழந்தையின் குழுவில் உள்ள உங்களுக்கு முக்கியப் பங்குள்ளது.

## இந்தத் தகவல்களை ஏன் நீங்கள் சேகரிக்கிறீர்கள்?

### எனது குழந்தையின் தகவல்கள் பாதுகாக்கப்படுகிறதா?

எங்கள் திட்டத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளின் தரவுகளையும் நாங்கள் சேகரிக்கிறோம். உங்கள் தனிப்பட்ட தரவுகளை உங்கள் உள்ளிடத் திட்டத்திலும் மாகாண ESIT குழுவிலும் காணலாம். அதைத் தாண்டியும் அதைப் பயன்படுத்தும்போது அடையாளம் காணத்தக்க தகவல்கள் பகிரப்படாது. முன்கூட்டிய தலையீட்டுச் எவ்வளவு நன்றாகச் செயல்படுகிறது என்பதைக் காட்டுவதற்காகவும் மூலவள முதலீட்டுக்கான மதிப்பை அது கொண்டுள்ளது என்பதற்காகவும் இந்தத் தரவுகளை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

Washington State Department of
CHILDREN, YOUTH & FAMILIES

# வளர்நிலை மைல்கற்கள்

*COS-ன் முக்கியப் பகுதிகளில் உங்கள் குழந்தை வளர உதவும் வழிகள்*



## நேர்மறையான சமூக-உணர்வுப்பூர்வ உறவுகளை வளர்ப்பது

**0-6 மாதங்கள்:**

- ஒரு புன்னகை, குரலொலி அல்லது தொடுதலுக்கு புன்னகைப்பது
- சத்தமாகச் சிரிப்பதும் விளையாட விரும்புவதும்
- அந்நியர்களைக் கவனிப்பது

**6-12 மாதங்கள்:**

- கண்ணாமூச்சி ஆடுவது
- ஒன்றைக் காட்டிலும் இன்னொரு பொம்மையிடம் விருப்பத்தைக் காட்டுவது
- பெரியோரின் மனநிலைகளுக்கு முறையாக எதிர்வினை புரிவது

**12-24 மாதங்கள்:**

- நேசத்தைக் காட்டுவது; கட்டியணைத்தல் முத்தங்களைத் திருப்பித் தருவது
- ஒருவரது கவனத்தைப் பெறுவதற்கு வார்த்தைகளை அல்லது சைகைகளைப் பயன்படுத்துவது
- பிற குழந்தைகளிடம் கவனம் செலுத்துவது



## திறமைகளையும் அறிவையும் பெறுவது

**0-6 மாதங்கள்:**

- பொருட்களை அல்லது ஆட்களைப் பார்ப்பது
- பகுதியளவு மறைந்திருக்கும் பொருளைக் கண்டுகொள்ளுதல்
- ஒரு பொம்மையைப் பிடித்திருக்கும்போது அதைப் பார்ப்பது

**6-18 மாதங்கள்:**

- பாட்-எ-கேக் போன்ற எளிய விளையாட்டுகளை விளையாடுவது
- ஒரு பொருளின் பெயரைச் சொல்லும்போது அதைச் சுட்டிக்காட்டுவது

**12-24 மாதங்கள்:**

- ஒரு புதிர்ப்பலகையில் வடிவங்களை அடையாளங்காண்பது
- ஒலிகள், வார்த்தைகள் அல்லது உடல் அசைவுகளைப் போலச் செய்வது
- ஐந்து உடல் பாகங்களின் பெயர் சொல்வது



## அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய முறையான நடத்தைகளைப் பயன்படுத்துதல்

**0-6 மாதங்கள்:**

- சொந்தப் பெயருக்கு எதிர்வினையளித்தல்
- பேசும்போது அழுகையை நிறுத்துவது
- வழங்கப்படும்போது மார்புக்காம்பினை நோக்கி தலையைத் திருப்புவது

**6-12 மாதங்கள்:**

- முதல் உண்மையான வார்த்தைகளைப் பயன்படுத்துவது
- ஒரு செயலைச் செய்வதற்கு வயதுவந்த ஒருவரை அல்லது ஒரு பொருளைத் தொடுவது
- "இல்லை" என தலையசைப்பது போன்ற சைகைகளைப் பயன்படுத்துவது

**12-24 மாதங்கள்:**

- பொம்மைகள் எப்படி இயங்குகின்றன எனக் கண்டறிய முயற்சிப்பது
- தனியாக நடப்பது படிக்கட்டுகளில் தவழ்ந்து ஏறுவது
- எட்டமுடியாத ஒன்றை எடுப்பதற்கு நாற்காலியில் ஏறிநிற்பது
- என்ன சாப்பிடுவது அல்லது உடுத்துவது போன்ற சில முடிவுகளை எடுப்பது

## உங்கள் குழந்தையால் செய்யக்கூடிய சில விசயங்களைப் பட்டியலிடுக

*இந்த ஆவணத்தின் பிரதிகளை நீங்கள் வேறு வடிவத்தில் அல்லது மொழியில் பெற விரும்பினால், தயவுசெய்து DCYF Constituent Relations (DCYF தொகுதித் தொடர்புகள்)-ஐ தொடர்புகொள்ளவும் (1-800-723-4831 | 360-902-8060, **ConstRelations@dcyf.wa.gov**).*

DCYF PUBLICATION FS_0025 TM (12-2019) Tamil